1981 எப்ரல் 21]

விடுவதாகச் சொன்னார்கள். இப்பொழுது திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு வரக்கூடிய ஏர்-கண்டிஷன்ட் பஸ்ஸிலே எப்போதுமே டிக்கட்டுகள் முழுமையாக நிரம்புவது இல்லை. கடுமையான கூட்டம் இருந்த நேற்று கூட அதிலே ஒரு டிக்கட் காலியாகத்தான் இருந்தது. அதிலே வரக்கூடிய வருமானம் சொகுசு வண்டியிலே வரக் கூடிய வருமானத்தைவிடக் குறைவாக இருக்கிறது. ஆகவே தான் இவ்வளவு அதிகமான செலவு செய்து இப்படி ஏர்-கண்டிஷன்ட் பஸ்கள் விடுவதைவிட சாதாரண பஸ்களையும், சொகுசு பஸ்களையும் விடுவதைப் பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து இந்த ஏர்கண்டிஷன்ட் வண்டியை ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி ஏர்கண்டிஷன்ட் பஸ்கள் வருகிற காரணத்தால், சொகுசு பஸ்கள் குறைந்து விடும் என்ற எண்ணம் வேண்டாம். ஆனால், எங்கே ஏ. சி. பஸ்களாலே நஷ்டம் ஏற்படுகிறதோ, அதை ரத்து செய்து லாபம் வரக்கூடிய அளவுக்கு, எந்தப் பேருந்திலே முழுக்க, எல்லோரும் ஏறுகிற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்த வழித்தடங்களிலே ஏற்படுத்தப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, நம்முடைய அமைச்சர் கர்நாடக அவர்கள் மாநிலத்திற்கும் தமிழக அரசிற்கும் 5 பஸ்கள் விடலாம் என்ற ஒப்பந்தம் இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே, மைசூருக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ரத்து செய்யப்பட்டு, பெங்களூர் வரைதான் செலுத்தப்படுகிறது. எனவே, மைசூருக்கு அந்த பஸ்ஸை முன்புபோல் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவகாசியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக துணைப் பணிமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 826—திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக துணைப் பணிமனை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப் பணிமனை எந்தப் பகுதியில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் துணைப் பணிமனை ஒன்று அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனை எப்பொழுது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து நம்முடைய போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கவேண்டுமென்று நாம் சொல்லி இருக்கிறோம். இப்பொழுது ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு தீவிரமான நடவடிக்கை எடுத்து, உடனடியாக அந்தப் பணிமனைக் கட்டப்படும்.

கூட்டுறவு சங்கங்களின் மூலம் "டீசல்" வழங்குதல்.

*வினா எண். 827—திரு. க. பரமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரைப் பகுதிகளில் டீசல் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதால், கூட்டுறவு சேவை சங்கங்கள், கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றின் மூலமாக தேவையான டீசல் சப்ளை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இல்லை.

திரு. க. பரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை, திருப்புவனம், திருப்பாச்சேத்தி பகுதிகளில் கரும்பு விவசாயம் மிக அதிகமாக இருக்கிற நிலையில், அங்கு வெல்லம் தயாரிக்கின்ற ஆலைகளும் மற்றும் தண்ணீர் இறைக்கின்ற பம்பு செட்டுகளும் இந்த மாதிரி டீசல் தட்டுப்பாடு காரணமாக, இயங்காமல் இருந்தன. ஆகவே, அது குறித்து ஒரு குறுகிய கால

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS